# யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

## முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 06
## First Term Examination – 2020 – Grade 06

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ்மொழியும் இலக்கியமும் | 22 | T | I, II | இரண்டு மணித்தியாலம்<br>Two Hours |

சுட்டெண்
Index No

**தமிழ்மொழியும் இலக்கியமும்**

### பகுதி - I

**மிகப் பெருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. காலைப் பொழுதில் அகிலமெங்கும் அழகுமயமாகக் காட்சியளித்தது. இங்கு அகிலம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்
   1. கடல் 2. வானம் 3. பூமி 4. அடவி

2. இலட்சியம் இல்லாத வாழ்வு இன்பத்தைத் தராது. இங்கு இலட்சியம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   1. அன்பு 2. குறிக்கோள் 3. அவலட்சியம் 4. நேர்மை

3. கண்ணகியின் முகம் கோபத்தால் சிவந்தது. இங்கு கோபம் என்பதன் எதிர்ப்பொருள்
   1. வீரம் 2. வெகுளி 3. சாந்தம் 4. சத்தியம்

4. “அடிமை வாழ்வு ஒழிக வென்றே….” இங்கு அடிமை என்பதன் எதிர்ப்பதம்
   1. ஆண்டான் 2. சுதந்திரம் 3. முதலாளி 4. தொழிலாளி

5. குயவன் - குயத்தி என்பதைப் போல சீமான் -
   1. சீமாள் 2. சீமாட்டி 3. சீமாளி 4. சீமானி

6. ஆண் யானை களிறு என்பது போல ஆண் மான்
   1. கலை 2. பிணை 3. பிடி 4. கடுவன்

7. தமிழ் நெடுங்கணக்கிலுள்ள மெய் எழுத்துக்கள் எத்தனை
   1. 247 2. 216 3. 30 4. 18

8. க் + இ = கி என்பது போல ட் + ஊ
   1. டி 2. கு 3. டூ 4. டொ

9. “காலையும் மாலையும் கடவுளை வணங்கு” இதில் எழுவாய்
   1. கடவுள் 2. நீ 3. காலை 4. வணங்கு

10. வெந்நீர் என்பதைப் பிரித்து எழுதினால்

   1. வெந் + நீர்   2. வெந்து + நீர்   3. வெம்மை + நீர்   4. வெப்பம் + நீர்

11. நதிக்கரையில் பறவைகளின் கூட்டம் அதிகமாகக் காணப்படுகின்றது. இவ்வாக்கியம் உணர்த்தும் காலம்

   1. இறந்தகாலம்   2. நிகழ்காலம்   3. எதிர்காலம்   4. தற்காலம்

12. முகவரி எழுதும் போது பயன்படுத்தப்படும் நிறுத்தற்குறியீடு

   1. வியப்புக்குறி   2. வினாக்குறி   3. காற்புள்ளி   4. அடைப்புக்குறி

13. பேசுவோனைச் சுட்டும் பெயர்

   1. படர்க்கை   2. முன்னிலை   3. தன்மை   4. உயர்திணை

14. விமலன் படிப்பிலும் விளையாட்டிலும் கெட்டிக்காரன். இது எவ்வகை வாக்கியம்

   1. தனிவாக்கியம்   2. கூட்டுவாக்கியம்   3. கலப்புவாக்கியம்   4. வினாவாக்கியம்

15. பின்வருவனவற்றுள் இடையின மெய்யெழுத்துக்களாக அமைவது

   1. க், ப், ற்   2. க், வ், ழ்   3. ய், வ், ள்   4. ங், ஞ், ம்

16. நட்சத்திரங்கள் இரவு வானில் அழகாகக் காட்சியளித்தன. இதில் நட்சத்திரங்கள் என்பது

   1. பெயர்த்தொடர்   2. வினைமுற்றுத் தொடர்
   3. பெயரெச்சத் தொடர்   4. வினையெச்சத் தொடர்

17. ஈமெயில் என்ற கலைச்சொல்லின் தமிழ் வடிவம்

   1. தொலைக்காட்சி   2. தொலைநகல்   3. மின்னஞ்சல்   4. இணையம்

18. எங்கள் வகுப்பில் உள்ளவர்களில் அகிலனே மிகச்சிறந்த கெட்டிக்காரன். இதில் பயனிலை

   1. அகிலன்   2. சிறந்த   3. கெட்டிக்காரன்   4. வகுப்பு

19. நானும் நீயும் கோவிலுக்குப் ……………………

   1. போவாய்   2. போவேன்   3. போவோம்   4. போவான்

20. எதனையும் ஆராய்ந்து செய்ய வேண்டும் எனும் கருத்தைத்தரும் பழமொழி

   1. ஆழமறியாமல் காலை விடாதே.
   2. எலி வளையானாலும் தனி வளை வேண்டும்.
   3. விளையும் பயிரை முளையிலே தெரியும்.
   4. சாண் ஏற முழம் சறுக்கும்.

## பகுதி – II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

1. செல்வந்தனிடமிருந்து பெறப்பட்ட தங்கங்களை ஈ.்.பண்டி என்ன செய்தான்?
2. சேவல் பூனைக்கு கூறிய அறிவுரை யாது?
3. “மாமருதின் நிழலிலே மந்தியினம் குந்தி….” எனும் பாடலைப் பாடியவர்?
4. பறவைகளுக்கு நான்கு கால்கள் எனக் கூறப்படுவதன் காரணம் யாது?
5. ஏமாந்த நாய் எனும் கதையை எழுதியவர் யார்?
6. உடல் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் எவை?

(12 புள்ளிகள்)

02. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாது எழுதுக.

1. சுத்தம் பேணி சுகமாய் வாழ்வோம்
2. நான் விரும்பும் பெரியார்
3. பெற்றோரைப் பேணுவோம்
4. வாசிப்பின் மகத்துவம்

(20 புள்ளிகள்)

03. உமது பாடசாலையின் பரிசளிப்பு விழா ஒன்றிற்காக உமது நண்பரை அழைக்கும் வகையில் 50 சொற்களுக்குக் குறையாமல் கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள்)

04. தொடர்புபடுத்துக

| | |
|---|---|
| மோவாஸ் | இருநூற்றுப்பதினாறு |
| காகளம் | ஒப்பனை |
| நாத்திகன் | குளிக்கும் தொட்டி |
| உயிர்மெய் | வாத்தியம் |
| வெள்ளுடுப்பு | கடவுள் இல்லை என்பவன் |

(10 புள்ளிகள்)

05. பின்வரும் சொற்களைக் கொண்டு பொருள் விளங்க வாக்கியம் அமைக்குக.

1. பானம் -
2. பாணம் -
3. குழவி –
4. குளவி –
5. கரி –
6. கறி –
7. அன்னம் -
8. அண்ணம் -

(8 புள்ளிகள்)